**தலைப்பு 275 – பொலன்னறுவை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 275 – பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 12 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

மாவட்ட செயலகத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 955.70 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 568.99 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 386.71 மில்லியன் அதாவது 40.46 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழும் | 351.50 | 340.53 | 10.97 | 3.12 |
| மூலதன | 604.20 | 228.46 | 375.74 | 62.19 |
| **மொத்தம்** | **955.70** | **568.99** | **386.71** | **40.46** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 20 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 17 திணைக்களங்களினால் ரூபா 603.75 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அந்த நிதிஏற்பாடுகளில் ரூபா 593.64 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 27501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 26.89 | 21.07 | 18.00 | 18.35 | 96.00 | 80.91 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் பின்வரும் 07 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 247.68 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0116/000 | 0.01 |
| 6000/0000/00/0002/0164/000 | 0.42 |
| 6000/0000/00/0013/0118/000 | 81.08 |
| 6000/0000/00/0016/0108/000 | 164.61 |
| 6000/0000/00/0017/0030/000 | 0.91 |
| 6000/0000/00/0018/0108/000 | 0.51 |
| 6000/0000/00/0019/0226/000 | 0.14 |
| **மொத்தம்** | **247.68** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினாலும் 7 பிரதேச செயலகங்களினாலும் கீழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ஹிங்குரக்கொட, மெதிரிகிரிய ஆகிய பிரதேச செயலகங்களினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப்பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | தமன்கடுவ மற்றும் மெதிரிகிரிய ஆகிய பிரதேச செயலகங்களினால் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | காசேடு/ சில்லறைக் காசேடு | நிதிப்பிரமாணம் 446 | தமன்கடுவ, ஹிங்குரக்கொட, மெதிரிகிரிய மற்றும் திம்புலாகல ஆகிய பிரதேச செயலகங்களினால் காசேடு பேணப்படாதிருந்ததுடன் தமன்கடுவ மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்களினால் சில்லறைக் காசேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கிடைத்த காசோலை/ காசுக் கட்டளை போன்றவற்றுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | மெதிரிகிரிய பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 850(1) | லங்காபுர, ஹிங்குரக்கொட மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்களினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | லங்காபுர, ஹிங்குரக்கொட மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்களினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | அடியிதழ்சேர் புத்தகப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | லங்காபுர மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்களினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | வாகன நிரற்படுத்தல் பதிவேடு அல்லது மோட்டார் வாகன சொத்துக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) மற்றும் 2002 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய ஐஏஐ/2002/01 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ஹிங்குரக்கொட, தமன்கடுவ மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகங்களினால் வாகன நிரற்படுத்தல் பதிவேடு அல்லது மோட்டார் வாகன சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ஐ) | கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினது வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் பிரிவு | மெதிரிகிரிய பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | விலை கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் பிரிவு | ஹிங்குரக்கொட மற்றும் திம்புலாகல பிரதேச செயலகங்களினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | நாளாந்த பெறுவனவுகள்/ கொடுப்பனவுகள் இடம் பெறும் பதிவேடு | 2002 திசெம்பர் 27 ஆந் திகதிய 157/2002 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை | மைதிரிகிரிய மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகங்களினால் பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்பட்ட கெமிதிரிய செயற்திட்டத்தின் கீழ் மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவில் தாபிக்கப்பட்டுள்ள 27 கிராமிய அமைப்பு செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ள பணம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மெதிரிகிரிய பிரதேச செயலகத்தில் 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாளாந்த காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் எவ்வித ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டிற்காக CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் காசேட்டின் பொழிப்பாக்கப்பட்ட கணனிக் கோவையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.3.1 பாதீட்டு முரண்கள்

14 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக அந்த செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதிஏற்பாட்டில் 8 சதவீதம் முதல் 94 வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

#### 3.3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு

பல்வேறு பணிகளுக்காக 20 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 17 திணைக்களங்களினால் முறையே ரூபா 432,157,157 மற்றும் ரூபா 171,590,880 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 603,748,037 தொகையான நிதிஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து முறையே ரூபா 425,186,521 மற்றும் ரூபா 168,450,591 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 593,637,112 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளில் முறையே ரூபா 6,970,636 மற்றும் ரூபா 3,140,289 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 10,110,925 அதாவது 1.8 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்குகள்

2 வருடங்களை விஞ்சிய ரூபா 29,717,141 கூட்டுத்தொகையான 71 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

27501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,294,209 ஆக இருந்ததுடன் அந்தக்கடன் மீதியில் ரூபா 1,085,430 தொகையான நிலுவை மீதி 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) ஓய்வுபெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முழுவதும் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 293,090 தொகையான கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாவட்ட செயலகத்திலிருந்து வெளியே பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 08 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடவேண்டிய ரூபா 1,192,956 இலிருந்து ரூபா 819,656 தொகையான 06 கடன் மீதிகள் 01 வருடம் முதல் 02 வருடங்கள் வரை காணப்பட்ட போதிலும், அந்த மீதியை அறவிடுவதற்காக மாட்ட செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சேவையைக் கைவிட்டுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 165,895 தொகை கடன் மீதி 2 வருடம் முதல் 6 வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த மீதியை அறவிடுவதற்காக மாவட்ட செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 206.5 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6.3 உள்ளகக் கணக்காய்வு**

மாவட்ட செயலகத்தினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.6.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்த 150 நாட்களுக்குள் மாவட்ட செயலகத்தின் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டிற்காக அந்த அறிக்கை 2016 யூலை 15 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கீழே வகைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவாகப்பயன்படுத்தப்பட்ட காலம் | |
|---|---|---|---|---|
| | | | 01 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்குக் குறைவு | 03 வருடங்களுக்கு மேல் |
| (i) | கட்டிடங்கள் | 12 | 09 | 03 |
| (ii) | மோட்டார் வாகனங்கள் (மோட்டார் சைக்கிள்) | 03 | 03 | - |
| (iii) | இயந்திரங்கள் பொறிகள் | 14 | 14 | - |

(ii) எலஹெர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் திவிநெகும சமூக அடிப்படை வங்கியின் கீழ் காணப்படுகின்ற 2156 வங்கிக் கணக்குகளின் ரூபா 11,475,306 கூட்டுத்தொகையான மீதி 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினதும் மற்றும் மெதிரிகிரிய பிரதேச செயலகத்தினதும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்ட செயலகத்திற்கும் பிரதேச செயலகங்களுக்கும் உரிய அரசாங்க இல்லங்கள் மற்றும் அதற்குரிய காணிகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மாவட்ட செயலகத்தினதும் பிரதேச செயலகங்களுக்கும் உரிய சகல வாகனங்கள் தொடர்பாகவும் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டள்ள சொத்துக்கள்**

ஹிங்குரக்கொட பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்லமொன்று சிவில் பாதுகாப்பு படையணியின் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக 2008 மார்ச் 21 ஆந் திகதி முதல் 2013 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரை உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கைக் காலத்தின் பின்னர் அந்த வீட்டை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2013 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2016 யூலை மாதம் வரை அறவிடவேண்டிய ரூபா 23,688 வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | | |
| (i) XII ஆம் அத்தியாயத்தின் 22.3 ஆம் உபபிரிவு | - | தமன்கடுவ பிரதேச செயலகத்தில் உத்தியோகத்தரொருவரின் 35 சம்பளமற்ற விடுமுறைகளைக் கணிப்பிடும் போது, வார இறுதி மற்றும் அரசின் விடுமுறை தினங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் உப பிரிவு | - | பொலன்னறுவை மாவட்ட செயலகத்திற்குரிய அரசாங்க வீடுகளில் 13 வீடுகள் ஏனைய அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக வீட்டுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் உபபிரிவு | - | மாவட்ட செயலகத்திற்குரிய பொது சேவை வீடுகளில் குடியிருக்கின்ற 07 உத்தியோகத்தரிடமிருந்து வாடகைக்கால எல்லையான 05 வருட காலத்தை விஞ்சி நீண்ட காலமாக அந்த வீடுகளில் குடியிருந்து வருகின்றமை அவதானிக்கப்பட்டது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக்கோவை

--------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104(1)(அ) | - | லங்காபுற பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டிக்கு 2014 யூன் 27 ஆந் திகதி ஏற்பட்ட விபத்து மற்றும் திம்புலாகல பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டிக்கு 2014 நவம்பர் 22 ஆந் திகதியும் 2015 பெப்ரவரி 19 ஆந் திகதியும் ஏற்பட்டிருந்த விபத்துத் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 115 | 104,079 | அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் அரசாங்க நிறுவனங்களுக்கு பழக் கன்றுகள் வழங்குவதற்காக பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 396 | 873,871 | மாவட்ட செயலகத்தினாலும் 06 பிரதேச செயலகங்களினாலும் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 873,871 கூட்டுத்தொகையான 47 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 751(i) | - | மெதிரிகிரிய பிரதேச செயலகத்திற்குக் கிடைத்த ரூபா 109,153 தொகையான பொருட்கள் மற்றும் தமன்கடுவ பிரதேச செயலகத்திற்குக் கிடைத்த 65 தண்ணீர் தாங்கிகள் என்பன பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே இடர் முகாமைத்துவப் பிரிவிற்குக் கிடைத்த 81 துவாய் இருப்புக்கள், 20 சமயலறைத் தொகுதிகள் மற்றும் 43 கட்டில் விரிப்புக்களின் இருப்பு என்பன இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 2015 மார்ச் 10 ஆந் திகதிய 3/2014(1) ஆம் இலக்க சுற்றறிக்கை | 46,599 | திம்புலாகல பிரதேச செயலகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களின் மாதாந்த கடமை தொலைபேசிச் செலவினத்தை விஞ்சி ரூபா 27,399 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

**3.9 வெளிநாட்டுதவி செயற்திட்டம்**

**செயற்திட்டத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் பிரதிபலன்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெமிதிரிய செயற்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் 157 கிராமிய அமைப்புக்களுக்காக 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் ரூபா 611.38 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் அடிப்படையில் கூழற்சிக் கடன் நிதியம் தொடர்பாக எவ்வித பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்பார்வையும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ‘‘யலி பிபிதெமு’’ செயற்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் தமன்கடுவ, லங்காபுற மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களில் 20 கிராமிய அமைப்புக்களுக்கு ரூபா 50,648,857 தொகை முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பணத்தை எதிர்பார்த்த நோக்கங்களில் ஈடுபடுத்துவது தொடர்பான மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.10 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

**நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எலஹெர பிரதேச செயலகப் பிரிவில் பைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்காக ரூபா 980,000 செலவில் 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர உபகரண இருப்புக்கள் உரிய எதிர்பார்த்த நோக்கங்களுக்காக 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எலஹெர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் மட்குடம் மற்றும் அலங்கார பொருள் உற்பத்தி ஆலையொன்றை ஆரம்பிப்பதற்காக சாத்தியவள ஆய்வின்றி ரூபா 882,000 செலவில் 2014 திசெம்பர் மாதத்தின் போது கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் உரிய நிர்மாணத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) எலஹெர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தும்புசார்ந்த உற்பத்தித் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 700,000 செலவில் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டுவரை மேலும் ரூபா 1,794,850 தொகை செலவிட்டதன் பின்னர் கூட்டுமொத்தமாக ரூபா 2,494,850 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் உரிய உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எலஹெர பிரதேச செயலக அதிகாரச் பிரதேசத்தில் 2 சீவனோபாய அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக ரூபா 100,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தும் அந்த நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 இல் வெள்ளத்தினால் பாதிப்பிற்குள்ளாகிய சிறிய நீர்ப்பாசனங்களை மீள் நிர்மாணிக்கும் செயற்திட்டங்களில் ரூபா 1,008,710 தொகையான 07 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.11 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

### சீராக்கப்பட வேண்டிய மீதி

பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினாலும், பிரதேச செயலகத்தினாலும் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக்கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சீராக்கம் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | |
|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்கு குறைவு | 1 வருடத்திற்கு மேல் 3 வருடங்களுக்குக் குறைவு | மொத்தம் |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 71,596,339 | 313,537 | 71,909,876 |
| (ii) | இனங்காணப்படாத செலவு | 9,838,134 | - | 9,838,134 |
| | மொத்தம் | 81,434,473 | 313,537 | 81,748,010 |

## 3.12 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2015 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 2,759,830 பெறுமதியான 22 காசோலைகளுக்காக 2016 ஏப்ரல் 05 ஆந் திகதி மீண்டும் புதிய காசோலையொன்று வரையப்பட்டிருந்தது. அப்புதிய காசோலை எலஹெர திவிநெகும தலைமையகத்தின் முகாமையாளரின் பொறுப்பில் இருந்தமை 2016 ஏப்ரல் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது. வரையப்பட்ட காசோலைகளுக்குரிய பொருட்கள் 2016 யூன் மாதம் வரையிலும் உரிய வழங்குனர்களினால் வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.13 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினாலும் சில பிரதேச செயலகங்களினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கிழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மெதிரிகிரிய பிரதேச செயலகத்தின் கொள்வனவு பதிவேட்டில் பக்க இலக்கம் இடப்படாதிருந்ததுடன் பக்கம் கைவிடப்பட்டு பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 22 கொள்வனவுத் தீர்மானங்களுக்காக கொள்வனவுக் குழுவின் இரண்டு அங்கத்தவர்கள் கையொப்பமிடாதிருந்ததுடன் 24 தீர்மானங்களுக்காக ஒரு அங்கத்தவர் கையொப்பமிட்டிருக்கவில்லை. கொள்வனவுத் தீர்மானம் தொடர்பாக எந்த விபரமும் குறிப்பிடப்படாதிருந்த வெற்றுப் பக்கங்களில் கொள்வனவுக் குழுவின் தலைவர் கையொப்பம் இட்டிருந்தார்.

(ii) லங்காபுற பிரதேச செயலகத்தினால் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது பிரதேச கொள்வனவுக் குழுவிற்காக தேவையான ஆகக் குறைந்த வரையறுத்த கூறுவிலை கோரல்களும், கேள்வி கோரும் போது வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த கால எல்லையினைவிட குறைவான காலம் வழங்கியமையும், விரிவான மாதிரியின்றிய கேள்வி கோரல்களும், கூறுவிலை கோரும் போது வியாபாரப் பெயர் குறிப்பிடல் போன்ற சட்ட நிலைமைகளுக்குப் புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iii) மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவுகளுக்காக கூறுவிலை கோரல் பல்வேறு பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றமையின் காரணமாக கொள்வனவு செய்தல் மற்றும் அவை தொடர்பான கொள்வனவு செயற்பாடுகள் வெளிப்படையின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) மாவட்ட செயலகத்தின் சிற்றுண்டிச்சாலையினை நடாத்திச் செல்வதற்காக வருடாந்த கூறுவிலை கோரப்பட்டு அதன் பிரகாரம் கொள்வனவுச் செயற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டு முதல் ஒரு நபருக்கு சிற்றுண்டிச்சாலை வழங்கப்பட்டிருந்தது.

### (ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

2014 மே 29 ஆந் திகதிய பீஎப்டீ/பீஎம்டீ/ஜீஈஎன்/003 ஆம் இலக்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் பிரதேச கொள்வனவுக் குழுவிற்காக சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் ரூபா 1 மில்லியன் வரை ஆகக்கூடியதன் கீழ் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக அதிகார எல்லை திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதற்கு முரணாக சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 3,397,143 தொகையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக 21 கொள்வனவுத் தீர்மானங்களின் மூலம் மொத்தக் கொள்வனவு விடயங்களும் சில பகுதிகளாக்கப்பட்டு சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீடின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த கொள்வனவுகளுக்குரியதாகச்

சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 2,669,692 பெறுமதியான பட்டியல்களின் பெறுமதி முறையற்றதாக இருந்தமை சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பெறுமதியை விட ரூபா 170,476 தொகை குறைத்துச் செலுத்தியமை மற்றும் ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யாமையின் காரணமாக ரூபா 60,550 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) வெலிகந்த பிரதேச செயலகத்தினால் ரூபா 2,059,795 பெறுமதியான 41 காசோலைகளும், லங்காபுற பிரதேச செயலகத்தினால் ரூபா 8,467,503 பெறுமதியான 34 காசோலைகளும் மற்றும் திம்புலாகல பிரதேச செயலகத்தினால் ரூபா 1,658,345 பெறுமதியான 6 காசோலைகளும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த பொருட்களுக்காகவும் நிறைவேற்றப்படாத செயற்திட்டத்திற்காகவும் காசோலைகள் வரையப்பட்டிருந்ததுடன் அந்த காசோலைகள் உரிய பிரதேச செயலகத்தினால் 2016 மார்ச் 8 ஆந் திகதி வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.14 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 மார்ச் 09 ஆந் திகதி உடவெல வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமூர்த்தி நலன்பெறுனர் மரணித்தமை தொடர்பான விபரங்கள் உரிய பிரகாரம் அறிக்கையிடாமையின் காரணமாக அந்த சமூர்த்தி நிதியுதவி 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை கிடைத்திருந்த சமூர்த்தி படிகள் தொடர்பாக உரிய நலனாளிக்கு அறவிக்காமல் அக் கணக்கில் ஒன்றுசேர்க்கப்பட்ட ரூபா 18,920 தொகையொன்றை பிழையாக அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது. அந்தப் பிரிவிற்குப் பொறுப்பான சமூர்த்தி உத்தியோகத்தரை உள்ளடக்கிய வங்கி முகாமைத்துவத்துடன் தொடர்பொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்கு வருடமொன்றிற்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 167 – பொத்குள் பிரதேசத்தில் திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தரினாலும் பராக்கிரம சமுத்திரய திவிநெகும சமூக அடிப்படை வங்கி முகாமையாளரினாலும் ஒரு அங்கத்தவரிடமிருந்து ரூபா 2,000 தொகையொன்று சேமிப்பாக வைப்புச் செய்வதற்கு அச்சுறுத்தி 39 அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 28,550 எவ்வித பற்றுச்சீட்டும் விநியோகிக்கப்படாது சேகரிக்கப்பட்டிருந்தது. மேலும் 164 – பராக்கிரம திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தரின் பற்றுச்சீட்டு புத்தகத்தை பரீட்சித்த போது ரூபா 16,600 பெறுமதியான 09 பற்றுச்சீட்டுக்கள் 2015 ஏப்ரல் 14 ஆந் திகதி ஆக எதிர்காலத் திகதியிட்டு விநியோகிக்கப்பட்டிருந்தமை 2015 ஏப்ரல் 10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**3.15 நட்டமும் இழப்பும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லங்காபுற பிரதேச செயலகத்தில் கெப் வண்டியொன்று 2015 நவம்பர் 01 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமையால் ரூபா 187,750 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. காப்புறுதி நிறுவனத்தினால் ரூபா 115,621 நட்டஈட்டுத்தொகை மாத்திரம் மீளளிப்புச்

செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 72,123 தொகையான நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொலன்னறுவை மாவட்டச் செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2013 ஆகஸ்ட் 24 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமையால் காப்புறுதி இழப்பீட்டின் மூலம் மேவுகை செய்யப்படாதிருந்த ரூபா 149,450 தொகையை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் மாதம் வரையிலும் அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொலன்னறுவை மாவட்ட செயலகத்திற்குரிய இரண்டு வானங்கள் 1996 ஆம் ஆண்டின் போதும், 2005 ஆம் ஆண்டின் போதும் விபத்துக்களுக்கு உட்பட்டமையின் காரணமாக முறையே ரூபா 29,225 மற்றும் ரூபா 648,625 தொகையான நட்டங்கள் பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.16 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எலஹெர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய அத்தனகடவல மற்றும் 02 எலஹெர திவி நெகும சமூக அடிப்படை வங்கிகளின் கணக்குகளின் தகவல்களின் பிரகாரம் 223 பேர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 42,643,612 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மெதிரிகிரிய மற்றும் எலஹெர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களில் 25 கற்குழிகள், 51 செங்கற்சூழைகள் மற்றும் கிரவல் வெட்டும் இடத்திற்காக 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அனுமதிப்பத்திரம் பெறப்படாதிருந்தமை கணக்காய்விற்குக் கிடைத்த கிராம உத்தியோகத்தரின் அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

## 3.17 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 38 | 33 | 5 |
| (ii) | மூன்றாம் நிலை | 427 | 232 | 195 |
| (iii) | இரண்டாம் நிலை | 568 | 477 | 91 |
| (iv) | ஆரம்ப நிலை | 103 | 86 | 17 |
| | **மொத்தம்** | **1,136** | **828** | **308** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மெதிரிகிரிய பிரதேச செயலகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த 37 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது எழுத்துமூலம் கடமை கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெற்றிடங்கள் காணப்படுகின்ற 04 பிரதேச செயலாளர் பதவிகளை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) எலஹெர பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு 2014 செப்தெம்பர் மாதத்திலிருந்து நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அப்பதவியின் பதிற்கடமைக்காக நியமிக்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தருக்கு முறையான நியமனமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எலஹெர பிரதேச செயலகத்தின் நிர்வாக, கிராம உத்தியோகத்தர் பதவி 2012 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகியிருந்ததுடன் 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் ஒரு வருட காலத்திற்காக பதிற்கடமை நியமனமொன்று வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், அதன் பின்னரான கால எல்லைக்காக காலத்தை நீடிக்காமல் உரிய உத்தியோகத்தரின் சேவை பெறப்பட்ட வண்ணமிருந்தது.

(உ) எலஹெர பிரதேச செயலகத்தின் பதவியணியினர் பணியிடமாற்றம் பெற்றுச் செல்லாது ஒரே சேவை நிலையத்தில் 06 வருடங்கள் முதல் 27 வருடங்கள் வரையிலான வீச்சில் சேவையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) தமன்கடுவ பிரதேச செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 03 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களும், 26 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், 02 அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்களும், 04 அபிவிருத்தி கள உதவி உத்தியோகத்தர்களும், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் அலுவலக உதவியாளர் சேவையில் 01 தொழிலாளர் மற்றும் அரச நிர்வாக அமைச்சின் கீழ் அலுவலக உதவியாளர் சேவையில் 04 உத்தியோகத்தர்களும் ஆக 40 பதவியணியினர் மிகையாகக் காணப்பட்டனர்.